# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
# THIRUVALLUR AT POONAMALLEE
## O.S.40/2017

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 03-11-2023

| | | | |
|---|---|---|---|
| Name | : Hemamalini | Caste | : |
| Husband Name | : Rupkumar | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**2 வது மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மாமியாரின் சொத்துக்கள் குறித்து நான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டுள்ளேன். எனது மாமியாரின் மாமனார் அவரது சொத்துக்களை தான பத்திரம் மூலம் எனது மாமியாருக்கு எழுதி கொடுத்துள்ளார். அதை போலவே எனது கணவரும் சொத்துக்களை பெற்றுள்ளார். எனது கணவரின் சகோதரரும் அது போன்றே சொத்துக்களை பெற்றுள்ளார். அதை போலவே எனது கணவரின் சகோதரியும் அது போன்றே சொத்துக்களை பெற்றுள்ளார். எனது கணவரின் சகோதரியான இந்துமதி இவ்வழக்கின் இரண்டாம் பிரதிவாதி. எனது மாமியார், கணவர், கணவரின் சகோதரர், கணவரின் சகோதரி ஆகியோரின் பெயரில் உள்ள தானப்பத்திரங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்துடன் பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா ஐடம் எண்.1 ல் கட்டிடம் உள்ளது. அதனுடைய கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த கட்டிடத்தில் ஐந்து கடைகள் உள்ளது. அந்த ஐந்து கடைகளின் கதவு எண்கள் எனக்கு தெரியவில்லை. அந்த கடைகளில் வாடகைதாரர்கள் உள்ளனர். அந்த வாடகைதாரர்களின் பெயர்கள், வேல்முருகன், ஒரு இஸ்லாமியர் (அவர் பெயர் தெரியவில்லை), சந்தோஷ் மற்ற இருவரின் பெயர்கள் எனக்கு தெரியவில்லை. ஐந்து கடைகளில் ஒரு கடையின் மாத வாடகை ரூ.4000, இன்னொரு கடையின் மாத வாடகை ரூ.4500. மற்ற மூன்று கடைகளின் மாத வாடகை எனக்கு தெரியவில்லை. மாத வாடகையாக

ரூ.4500 செலுத்தும் வாடகைதாரரின் பெயர் முருகேசன். மாத வாடகையாக ரூ.4000 செலுத்தும் வாடகைதாரரின் பெயர் தெரியவில்லை, அவர் ஒரு இஸ்லாமியர். இந்த இரண்டு கடைகளுக்கான மாத வாடகையை நான் பெற்று வருகிறேன். மற்ற மூன்று கடைகளில் இரண்டு கடைகளுக்கான மாத வாடகையை 1 வது பிரதிவாதியும், மீதமுள்ள ஒரு கடைக்கான மாத வாடகையை இரண்டாவது பிரதிவாதியும் பெற்று வருகின்றனர். எனது மாமியார் உயிரோடு இருக்கும் காலத்தில் எனது கணவரின் சகோதரர் அந்த ஐந் கடைகளுக்கான மாத வாடகையை பெற்று வந்தார். அவர் இறந்த பின்னர், இரண்டு கடைகளுக்கான மாத வாடகையை நான் பெற்று வருகிறேன். வேறு இரண்டு கடைகளுக்கான மாத வாடகையை முதலாவது பிரதிவாதியும், மீதமுள்ள ஒரு கடைக்கான மாத வாடகையை இரண்டாவது பிரதிவாதியும் பெற்று வருகிறார். நான் மேற்கூறிய வாடகையை பெற்று வருகிறேன் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இது பற்றிய விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்கூறிய கடைகளினுடைய சென்னை மாநகராட்சியின் சொத்துவரி விதிப்பு எனது மாமியார் பெயரில் உள்ளது. அந்த வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கடைகளுக்கான மின் இணைப்பு எனது 3 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது. மாநகராட்சி வீட்டு வரி விதிப்பும் 3 வது பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றும் எனது மாமியார் பெயரில் வருகிறது என்று தவறாக நான் சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆந்திர பிரதேசம் மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள குலகந்து கிராமத்தில் ஒரு சொத்து எனது மாமியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்கூறிய குலகந்து கிரமாதில்லுள்ள சொத்தில் நான் பாகப்பிரிவினை கேட்கவில்லை என்றால் சரிதான். ஆதலால் மேற்கூறிய சொத்தை இவ்வழக்கில் ஒரு சொத்தாக சேர்க்கப்படாததினால் இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை என்பதால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் 2003 ல் சென்னையிலிருந்து ஆந்திர பிரதேசத்திற்கு குடியமர சென்றேன். 2003 ல் எனக்கு ஆந்திர பிரதேசத்தில் வேலை கிடைத்துவிட்டது. 2003 க்கு பின்னர் எனது மாமியார் இறக்கும் வரை என்னுடன் வசித்து வந்தாரா என்றால் இல்லை. அப்போதைக்கு அப்போது அவர் எனது வீட்டிற்கு வந்து செல்வார். எனது கணவரின் சகோதரர் 2013 ல் இறந்தார். எனது மாமியார் இறந்த பின்னர்

முதல் பிரதிவாதி நெல்லூருக்கு குடியபெயர சென்றுவிட்டார். எனது மாமியார் இறக்கும் காலத்தில் அவருக்கு வயது முதிர்வு நோய் எதுவும் இருந்ததா என்றால் அவர் மூளையில் கட்டி இருந்தது. எனது மாமியார் மருத்துவ மனையில் இருந்த போது அவரை பார்த்துக் கொண்டது யார் என்றால் நான், எனது கணவரின் சகோதரர் மற்றும் எனது கணவரின் சகோதரி. எனது மாமியார் மூன்று மருத்துவ மனைகளில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். அந்த மருத்துவ மனைகள், சென்னை அடையாரில் உள்ள புற்று நோய் மருத்துவ மனை மற்றும் பில்ராத் மருத்துவ மனை. இன்னொரு மருத்துவ மனையின் பெயர் எனக்கு நினைவில்லை. அடையார் புற்று நோய் மருத்துவ மனையில் சிகிச்சையில் இருந்த போது நானும் எனது கணவரின் சகோதரரும் எனது மாமியாரை பார்த்துக்கொண்டோம். பில்ராத் மருத்துவ மனையில் எனது மாமியார் சிகிச்சையில் இருந்த போது சில நாட்கள் நானும் அதன் பின்னர் எனது கணவரின் சகோதரரும் அதற்கு பின்னர் எனது கணவரின் சகோரதரியும் பார்த்துக்கொண்டோம். நான் ஒரு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு எனது மாமியாரை அடையார் புற்று நோய் மருத்துவ மனையில் பார்த்துக்கொண்டேன். அதன் பின்னர் 20 நாட்கள் எனது மாமியாரை பில்ராத் மருத்துவ மனையில் பார்த்துக் கொண்டேன். பின்னர் 40 நாட்கள் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டேன். 3 மாதங்கள் விடுமுறை எடுத்துக் கொண்ட பின்னர் நான் எனது வேலைக்கு சென்றுவிட்டேன்.

(கற்றறிந்த **2 மற்றும் 3 வது** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).